
# 2010

# வருடாந்த முன்னேற்ற அறிக்கை




**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

**த.பெ.இல. 14. பேராதனை.**

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| எமது முன்னேற்றம் ஒரே பார்வையில் | பக்கம் 03 |
| அறிமுகம் | பக்கம் 04 |
| அடைவுகள், சாதனைகள் | பக்கம் 07 |
| அரச தாவரவியல் பூங்கா | பக்கம் 12 |
| பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு | பக்கம் 16 |
| தேசிய தாவரவியல் கூடம் | பக்கம் 25 |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | பக்கம் 31 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | பக்கம் 35 |
| மூலிகைத் தாவரப் பூங்கா – கனேவத்த | பக்கம் 38 |
| உலர் வலய தாவரவியல் பூங்கா – அம்பாந்தோட்டை | பக்கம் 39 |
| ஈரவலய தாவரவியல் பூங்கா – அவிசாவலை | பக்கம் 41 |
| அதிமேதகு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரது வாசஸ்தலங்களின் பூங்காக்கள் | பக்கம் 43 |
| பொதுநலவாய போர் சமாதிகள் | பக்கம் 44 |
| 2011 ம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் | பக்கம் 45 |

**எமது முன்னேற்றம் ஒரே பார்வையில்**
**2010 ஆம் ஆண்டின் வருமானம்**
ரூ. 179,650,028.48




■ அரச தாவரவியல் பூங்கா பேராதனை ■ ஹக்கல தாவரவியல் பூங்கா ■ கம்பஹா தாவரவியல் பூங்கா ■ அம்பாந்தோட்டை தாவரவியல் பூங்கா ■ மூலிகைத் தாவரப் பூங்கா-கனேவத்த ■ டொரிங்டன் நாற்று மேடை ■ தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

பார்வையாளர்கள் பற்றிய தகவல்கள் :

| அலகு | 2009 | | 2010 | |
|---|---|---|---|---|
| | வெளிநாடு | உள்நாடு | வெளிநாடு | உள்நாடு |
| பேராதனை | 117,427 | 997,997 | 200,468 | 1,089,282 |
| ஹக்கல | 5,871 | 508,913 | 10,287 | 458,696 |
| கம்பஹா | 127 | 197,443 | 194 | 153,431 |
| மொத்தம் | **123,425** | **1,704,353** | **210,949** | **1,701,409** |

செலவுகள்

| விபரம் | தேறிய ஒதுக்கீடு | மொத்தச் செலவு | கையிருப்பில் உள்ள ஒதுக்கீடு | % |
|---|---|---|---|---|
| மூலதனச் செலவுகள் | 150,590,000.00 | 148,924,872.00 | 1,664,137.00 | **98.8** |
| மீண்டெழும் செலவுகள் | 154,728,000.00 | 149,778,667.00 | 4,949,333.00 | **96.8** |

## 1. அறிமுகம்.

### 1.1. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் வரலாறு.

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களமானது இலங்கையின் தாவரப் பல்வகைமையை வெளிவாரி முறைமையின் கீழ் பேணிப் பாதுகாப்பதற்கும், அலங்கார பூங்காவியல் கலையை ஊக்குவிப்பதற்குத் தேவையான ஆய்வு மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பாரியளவு பங்களிப்புச் செய்கின்றது.

இத்திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற அனைத்துத் தாவரவியல் பூங்காக்களும் 19ம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடி தாவரவியல் நிறுவனங்களாகும். இப்பூங்காக்கள் தேசிய ரீதியிலும், தாவரச் சேமிப்புக்கும் ஆய்வுக்குமான – குறிப்பாக அயன வலயத்துக்குரிய தென்கிழக்காசிய பிராந்தியத்தைச் சார்ந்த தாவரங்கள் - சிறப்பு மத்திய நிலையங்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. முழு உலகிலும் நன்கு அறியப்பட்டுள்ள இப்பூங்காக்களை வருடந்தோறும் 1.8 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்கள் தரிசிக்கின்றனர்.

பேராதனை, அரச தாவரவியல் பூங்கா (1821), ஹக்கல தாவரவியல் பூங்கா (1861), கம்பஹா, ஹெரைத்கொட தாவரவியல் பூங்கா (1876) ஆகியன பிரித்தானியர்களால் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது மூலிகைத் தாவரப் பூங்கா 1950ல் ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு உலர் வலய மற்றும் ஈரவலய தாவரவியல் பூங்காக்கள் முறையே அம்பாந்தோட்டையிலும், அவிசாவலையிலும் 2011ம் ஆண்டில் திறக்கப்பட்டுள்ளன.

1912 ல் விவசாயத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேசிய தாவரவியல் பூங்காக்கள் அதன் ஒரு பிரிவாக இயங்கின. 2006ல் ஒரு பணிப்பாளர் நாயகத்தின் கீழ் தனியான திணைக்களமாக அது ஆக்கப்பட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் தாவரங்களின் பாதுகாப்புக்கும் ஆய்வுக்கும் பொறுப்பான முன்னோடி நிறுவனமாக இயங்கி வருகின்றது.

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் இலக்கு**

இலங்கையின் தாவரப் பாதுகாப்பிற்கான பிரதான மையமாக அமைந்து, உள்நாட்டுப் பொருளாதார மேம்பாட்டுக்காக முழுமையான பங்களிப்பை வழங்குவதுடன், தாவரவியல் விஞ்ஞான ரீதியாகவும் அழகியல் ரீதியாகவும் உலகின் மிகச்சிறந்த அயன மண்டல வலய தாவரவியல் பூங்காவாக 2015ம் ஆண்டளவில் ஆகுதல்

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணி**

இலங்கையின் இயற்கையானதும் வளமானதுமான சூழலில் காணப்படும் தாவரவியல் பற்றிய கற்கையாய்வு, நிலையான பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்குக்கான சந்தர்ப்பங்களை மக்களுக்கு வழங்குதல்

**1.2. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள்**

- இலங்கையின் தாவரவியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதில் வெளிவாரி பாதுகாப்பு முறைகளை செயல்வலுப் பெறச் செய்தல் தொடர்பில் தேவையான திட்டங்களை வகுத்தலும் செயல்படுத்தலும்
- கல்வி மற்றும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி இலங்கையின் தாவர வளங்கள் சம்பந்தமாகவும் தாவர வளங்களுடன் தொடர்புற்றுக் காணப்படும் பல்வேறு வகையான கைத் தொழில் நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் சரியான தகவல்களையும் கலையறிவினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலங்கையில் பூச்செடிச் செய்கைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில் நுட்ப முறைகளை பரீட்சித்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர்தரத்தில் பராமரித்தல்.
- பொருத்தமான இடங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல்.
- அலங்கார தாவரவியல் ஆய்வினை இலங்கையில் விஸ்தரிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை அமுலாக்குதல்.
- இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாவரங்களை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

- அநுராதபுரம் புனித அரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல்.

**1.3. இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அலகுகளும்**

1. அரச தாவரவியல் பூங்கா, பேராதனை
2. ஹக்கல தாவரவியல் பூங்கா, ஹக்கல
3. ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா – கம்பஹா
4. தேசிய தாவரவியல் கூடம் - பேராதனை
5. மூலிகைப் பூங்கா – கனேவத்த
6. உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில அம்பாந்தோட்டை
7. சீதாவாக்கை ஈரவலய தாவரவியல் பூங்கா இலுக்ஓவிட்ட, அவிசாவலை.
8. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு பேராதனை.
9. கல்வி நிலையம் - பேராதனை
10. ஜனாதிபதி வாசஸ்தலப் பூங்கா – கொழும்பு
11. ஜனாதிபதி வாசஸ்தலப் பூங்கா – கண்டி
12. ஜனாதிபதி வாசஸ்தலப் பூங்கா - நுவரெலியா
13. ஜனாதிபதி மாளிகைப் பூங்கா, அநுராதபுரம்
14. அலரி மாளிகைப் பூங்கா – கொழும்பு
15. பிரதமர் அலுவலகப் பூங்கா – கொழும்பு
16. பிரதமர் வாசஸ்தலப் பூங்கா – நுவரெலியா
17. விசும்பாய, பிரதமர் வாசஸ்தலப் பூங்கா
18. சுவஹஸ்மல் செவன சுதந்திர சதுக்கம் கொழும்பு
19. பூங்கா உதவியாளர் அலுவலகம் நாரஹேன்பிட்ட
20. பொதுநலவாய போர் சமாதி பிடகந்த, கண்டி.
21. பொதுநலவாய போர் சமாதி – பொரல்ல
22. பொதுநலவாய போர் சமாதி – ஜாவத்த
23. பொதுநலவாய போர் சமாதி – நிலாவெளி திருகோணமலை

**1.4. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணியாளர் விபரம்**

அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை : 699

தற்போதைய பணியாளர் விபரம் : 423 (17 பதவி நிலை அலுவலர்கள், 37 இலங்கை தொழில் நுட்ப சேவை அலுவலர்கள், 03 பட்டதாரி விவசாய மேற்பார்வை அலுவலர்கள், 20 பட்டதாரி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் மற்றும் 28 முகாமைத்துவ சேவை அலுவலர்கள்.)

**ஊழியர் அமைப்பு விபரம்**


| வகை | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் தொகை | தற்போதைய பணியாளர் தொகை |
|---|---|---|
| **சிரேஷ்டத் தரம்** | 31 | 17 |
| **மூன்றாம் நிலை** | 58 | 33 |
| **இரண்டாம் நிலை** | 95 | 72 |
| **ஆரம்ப நிலை** | 515 | 301 |
| **சமுர்த்தி அலுவலர்கள்** | - | 12 |
| **ஒப்பந்தத் தொழிலாளர்** | - | 255 |
| **மொத்தம்** | **699** | **690** |


## 2. அடைவுகள்


### 2.1. பார்வையாளர்கள் பற்றிய தகவல்கள்

பேராதனை, ஹக்கல, கம்பஹா ஆகிய தாவரவியல் பூங்காக்கள் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு 1,912,358 பேர் (1,701,409 உள்நாட்டவர்களும் 210,949 வெளிநாட்டவர்களும்) இவ்வருடம் இவற்றைத் தரிசித்தனர். இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 6மு அதிகரிப்பாகும். அவ்வாறே வெளிநாட்டுப் பார்வையாளர்களின் எண்ணிக்கை முன்னைய வருடத்தோடு ஒப்பிடும் போது 71மு வளர்ச்சியைக் காட்டுகிறது.

| பார்வையாளர் வகை | பேராதனை | ஹக்கல | கம்பஹா | மொத்தம் |
|---|---|---|---|---|
| வளர்ந்தோர் - உள்நாடு | 839,327 | 334,824 | 137,335 | **1,311,486** |
| சிறார் - உள்நாடு | 249,955 | 123,872 | 16,096 | **389,923** |
| **மொத்தம் உள்நாடு** | **1,089,282** | **458,696** | **153,431** | **1,701,409** |
| வளர்ந்தோர் - வெளிநாடு | 190,278 | 9,131 | 182 | **199,591** |
| சிறார் - வெளிநாடு | 6,060 | 684 | 9 | **6,753** |
| மாணவர் - வெளிநாடு | 4,130 | 472 | 3 | **4,605** |
| **மொத்தம் - வெளிநாடு** | **200,468** | **10,287** | **194** | **210,949** |
| **மொத்தப் பார்வையாளர்கள்** | **1,289,750** | **468,983** | **153,625** | **1,912,358** |






| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| Total | 1,493,982 | 1,673,092 | 1,478,153 | 1,800,542 | 1,912,358 |

## 2.2. வருமான விபரங்கள்

நுழைவுக் கட்டணம், தாவர விற்பனை, வாடகைகள் என்பன மூலம் பெற்ற மொத்த வருமானம் ரூ. 179.6 மில்லியன்களாகும். இது முன்னைய ஆண்டின் வருமானத்தை (ரூ. 128.7 மில்லியன்) விடக் கூடியதாகும்.

| அலகுகள் | மொத்த வருமானம் (ரூ.) |
|---|---|
| அரச தாவரவியல் பூங்கா – பேராதனை | 148,259,439.72 |
| அரச தாவரவியல் பூங்கா - ஹக்கல | 19,563,979.12 |
| அரச தாவரவியல் பூங்கா – கம்பஹா | 7,745,576.50 |
| அரச தாவரவியல் பூங்கா – அம்பாந்தோட்டை | 17,915.00 |
| மூலிகைத் தாவரப் பூங்கா – கனேவத்த | 800,172.70 |
| டொரிங்டன் நாற்று மேடை – கொழும்பு | 1,999,017.44 |
| தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் | 1,263,920.00 |
| மொத்தம் | **179,650,020.48** |

2.3 அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு விபரங்கள்
வகை இல : 32201

| | செலவுகளுக்கான உயர் எல்லை ரூ. | பெறுகைகளுக்கான அதிகுறைந்த எல்லை ரூ. | பற்று மீதிக்கான உயர் எல்லை ரூ. |
|---|---|---|---|
| **வரவு செலவுத் திட்ட உத்தேசம் 2010** | **20,000,000.00** | **8,100,000.00** | **49,000,000.00** |
| **மீளமைக்கப்பட்ட எல்லைகள்** | - | - | - |
| **உண்மைத் தரவு** | **18,211,797.00** | **10,039,878.51** | **41,147,427.54** |

## 2.3. செலவுகள்

### 2.3.1. மூலதனச் செலவுகள்

| உப செயற் திட்டம் | விடயக் குறியீடு | விடய விபரம் | தேறிய ஒதுக்கீடு 2010 ன் வரவு செலவுத் திட்டம் ரூ. (000) | மொத்தச் செலவு ரூ (000) | மீதமுள்ள ஒதுக்கீடு ரூ. (000) | % |
|---|---|---|---|---|---|---|
| | | **கட்டிடங்களையும், கட்டமைப்புக் களையும் புணர் நிர்மாணம் செய்தல்** | | | | |
| 0 | 2001 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 650 | 638.152 | 11.857 | 98 |
| 0 | 2002 | பொறித் தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள், | 300 | 297.684 | 2.316 | 99 |
| 0 | 2003 | வாகனங்கள் | 500 | 492.290 | 6.710 | 98 |
| | | **மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்** | | | | |
| 0 | 2101 | வாகனங்கள் | | | | |
| 0 | 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 300 | 297.000 | 3 | 99 |
| 0 | 2103 | பொறித் தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள், | 300 | 291.028 | 8.972 | 97 |
| 0 | 2104 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 900 | 895.009 | 4.991 | 99 |
| 0 | 2105 | காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள் | 1,000 | 991.620 | 8.380 | 99 |
| | | **மூலதன மாற்றுகைகள்** | | | | |
| 0 | 2201 | தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் | 40,000 | 39,999.999 | 0.001 | 100 |
| 0 | 2401 | பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி | 90 | 46.961 | 43.039 | 51 |
| | | **விஷேட செயற் திட்டங்கள்** | | | | |
| 1 | 2502 | கம்பஹா தாவரவியல் பூங்கா அபிவிருத்தி | 7,000 | 6,937.543 | 62.457 | 99 |
| 1 | 2502 | கனேவத்த மூலிகைப் பூங்கா | 5,750 | 5,682.874 | 67.126 | 98 |
| 2 | 2502 | பூச்செடிச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 37,000 | 36,330.695 | 669.305 | 98 |
| 3 | 2502 | உலர் வலய தாவரவியல் பூங்கா | 50,000 | 49,277.515 | 722.485 | 98 |
| 4 | 2502 | அவிசாவலை தாவரவியல் பூங்கா | 6,800 | 6,746.502 | 53.498 | 99 |
| | | மொத்தம் | **150,590** | **148,924.872** | **1,664.137** | **98.8** |

### 2.3.2. மீண்டெழும் செலவுகள்

| விடயக் குறியீடு | விடய விபரம் | தேறிய ஒதுக்கீடு 2010 ன் வரவு செலவுத் திட்டம் | மொத்தச் செலவு ரூ. | மீதமுள்ள ஒதுக்கீடு | % |
|---|---|---|---|---|---|
| | **ஆட்களுக்கான கொடுப்பனவுகள்** | | | | |
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 83,000,000.00 | 82,079,671.00 | 920,329.00 | 98.8 |
| 2002 | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 5,300,000.00 | 4,969,881.00 | 330,119.00 | 93.7 |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 34,928,000.00 | 32,557,941.00 | 2,370,059.00 | 93.2 |
| | **பிரயாணச் செலவுகள்** | | | | |
| 1101 | உள்நாடு | 1,000,000.00 | 988,888.00 | 11,112.00 | 98.8 |
| 1102 | வெளிநாடு | 100,000.00 | 70,086.00 | 29,914.00 | 70 |
| | **வழங்கல்கள்** | | | | |
| 1201 | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | 600,000.00 | 596,278.00 | 3,722.00 | 99.3 |
| 1202 | எரிபொருள் | 1,900,000.00 | 1,699,628.00 | 200,372.00 | 89.4 |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 150,000.00 | 141,749.00 | 8,251.00 | 94.4 |
| 1205 | வேறு | 2,300,000.00 | 2,094,172.00 | 205,828.00 | 91 |
| | **நடத்துகைச் செலவுகள்** | | | | |
| 1301 | வாகனங்கள் | 1,000,000.00 | 988,240.00 | 11,760.00 | 98.8 |
| 1302 | பொறித் தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 300,000.00 | 298,367.00 | 1,633.00 | 99.4 |
| 1303 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 300,000.00 | 298,715.00 | 1,285.00 | 99.5 |
| | **சேவைகள்** | | | | |
| 1401 | போக்குவரத்து | 700,000.00 | 698,390.00 | 1,610.00 | 99.7 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,300,000.00 | 1,215,698.00 | 84,302.00 | 93.5 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 4,000,000.00 | 3,825,375.00 | 174,625.00 | 95.6 |
| 1404 | வாடகைகளும் உள்நாட்டு வரிகளும் | 600,000.00 | 596,817.00 | 3,183.00 | 99.4 |
| 1405 | ஏனைய சேவைகள் | 16,500,000.00 | 15,943,636.00 | 556,364.00 | 96.6 |
| | **மாற்றுகைகள்** | | | | |
| 1506 | ஆதனக் கடன் வட்டி | 750,000.00 | 715,135.00 | 34,865.00 | 95.3 |
| | மொத்தம் | **154,728,000.00** | **149,778,667.00** | **4,949,333.00** | 96.8 |

## 3. அரச தாவரவியல் பூங்கா. பேராதனை

### 3.1. அறிமுகம்


பேராதனை, அரச தாவரவியல் பூங்காவானது, இலங்கையின் மிக நீண்ட நதியான மகாவலி கங்கையால் சூழப்பட்ட குதிரை லாட வடிவிலான தீப கண்டமொன்றில் அமைந்துள்ளது. இது மத்திய மலை நாட்டின் தலை நகரான கண்டி மாநகரிலிருந்து 6 ½ கி.மீ. தூரத்தில் சுமார் 147 ஏக்கர் நிலப்பரப்பில் (60 ஹெக்டயர்) அமைந்து சுமார் 4500 தாவர வகைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

மேலும் அது வகையினதான அலங்காரத் தாவரங்களுக்கும் இலங்கையின் விஷேடட வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்யும் பல்வகைச் செடி, கொடிகளுக்குமான இல்லமாகவும் அமைந்துள்ளது. அதன் புல்வெளிகள் நெடுகிலும் செழிப்பாக வளர்ந்த பிரமாண்டமான அயன வலய மரங்கள் காணப்படுகின்றன. இப்பூங்காவின் பிரதான அலங்காரமாக அதன் ஓக்கிட் இல்லம் காணப்படுகிறது. அதில் 300 க்கும் அதிகமான மிக அழகிய , செழிப்புமிக்க ஓக்கிட் வகைகள் காணப்படுகின்றன. அதன் வாசனைத் திரவியத் தோட்டத்தில் பாரம்பரிய ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கப்பயன்படும் மரங்களும் தாவரங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இப்பூங்காவின் உயர்ச்சி மிக்க அழகுக்கு மகாவலி கங்கை மேலும் மெருகூட்டுகிறது.

தாவர வளங்களை அறிந்து கொள்ளவும், ரசிக்கவும் இயற்கையானதும் செயற்கையானதுமான சூழல்களில் அவற்றை முகாமை செய்யவுமான சந்தர்ப்பத்தை இவ் அரச தாவரவியல் பூங்கா மக்களுக்கு வழங்குகிறது.

### 3.2. தாவர உற்பத்தி

பெருமளவிலான தாவரங்களும் விதைப் பொதிகளும் ஏனைய தாவர உற்பத்திகளும் (உலர்ந்த பூக்கள், மூங்கில் பூச்சாடிகள், வாசனைத் திரவியங்கள், பூக்கள்) விற்பனைக்கென உற்பத்தி செய்யப்பட்டன. அத்தோடு 127,794 வெளிக்களத் தாவரங்களும் 113.5 கி.கி. விதைகளும் சேகரிக்கப்பட்டு பூங்காவின் உயிர்ச் சேமிப்பை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டன.



**3.3 தாவர வெளிவாரிப் பேணுகை முறை**

பூங்காவின் உயிர்ச் சேமிப்பையும் தாவர வெளிவாரிப் பேணுகையையும் மேம்படுத்தும் பொருட்டு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (அட்டவணை 5 ஐப் பார்க்க) மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சார்ந்த விகாரைகளின் தலைமைப் பிக்குகளின் வேண்டுகோளுக்கிணங்க வரலாற்று மற்றும் சமய முக்கியத்துவம் வாய்ந்த 25 மரங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டன.

**பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன :**

- எமது நாட்டுக்குரிய புதிய மரவகைகளை மரத் தோட்டத்தில் நடலும் மீள் நடலும்
- வெளிநாட்டுத் தாவரங்களை மரத் தோட்டத்தில் நடலும் மீள் நடலும்
- மரங்களின் அடிப்பகுதி மற்றும் தண்டுப் பகுதிகளுக்கு சிகிச்சையளித்தலும் அவற்றை ஆகாரங்கள், தண்டுகள், கம்பிகள் மூலம் விழாமல் பாதுகாத்தலும்
- இறந்த / விழுந்த மரங்களை மரத் தோட்டத்திலிருந்து அகற்றுதல்
- தாவரங்களுக்கு லேபல் இடல்
- மரச் சத்திர சிகிச்சை நிகழ்ச்சிகள்

**3.4 கல்வி மற்றும் பயிற்சி**

அந்தூரியம், ஒக்கிட்,ரோசா, இலைத் தாவரங்கள், ஜேர்பெரா ஆகிய தாவர வகைகளைப் பயிரிடல், பெருக்கம் செய்தல் என்பன பற்றி 3058 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

நாற்றுமேடை முகாமைத்துவம், தாவர அடையாளம் காணல், உயிரியல் பல்வகைமை, மரச்சத்திர சிகிச்சை, பூ அலங்காரங்கள், அறுவடைக்கும் பிந்திய தொழில்நுட்பங்கள், தாவரவியல் பூங்காக்கள் என்பன பற்றி 2339 பேருக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் நில வடிவமைப்புத் துறையில் 1088 பேருக்குப் பயிற்சயளிக்கப்பட்டது. நிலவடிவமைப்பு மற்றும் பூச்செடிச் செய்கை தொடர்பான இரண்டு வருட டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த 16 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### 3.5. கீழ்க்கட்டுமான அபிவிருத்தி

- பிரதான நுழைவாயில், சுற்று வட்டம் மற்றும் அரச பனைத் தாவர வீதி ஆகியவற்றுக்கு காபட் இடும் வேலைகளும் ஆற்றோரப் பாதைக்கு தார் இடும் வேலைகளும் ஏனைய வீதிகளின் திருத்த வேலைகளும் நிறைவு செய்யப்பட்டன.
- கள்ளி இனத் தாவரங்களைப் பெருக்கம் செய்வதற்காக ஒரு புதிய தாவர இல்லம் நிர்மாணிக்கப்பட்டது.
- சகல வசதிகளுடனான 04 கழிவறைகள் நிர்மாணிக்கப்பட்டன.
- தாவர விற்பனை நிலையம் மற்றும் தேசிய தாவரவியல் கூடம் ஆகியவற்றில் பல விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு தொங்குபாலமும் பழுது பார்க்கப்பட்டது.
- புனித அரச மரத்தின் கன்றுகளை உருவாக்குவதற்கான தாவர இல்லம் மேம்படுத்தப்பட்டதோடு “சரகா” இல்லமும் புதுப்பிக்கப்பட்டது.



புதிய மலசல கூடத்தொகுதி நிர்மாணம்



புதிய கள்ளி இல்ல நிர்மாணம்



புதுப்பிக்கப்பட்ட சரகா இல்லம்



உள்ளக வீதிகளுக்கு காபட் இடல்

### 3.6. விஷேட நிகழ்வுகள்

- ஜப்பானியத் தோட்டம் வடிவமைக்கப்பட்டது.
- தேசத்துக்கு நிழல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரச தாவரவியல் பூங்காவின் மரத் தோட்டத்தில் 204 மரக்கன்றுகள் நடப்பட்டதோடு, வேறு அரச நிறுவனங்களுக்கு 105 மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.




“தேசத்துக்கு நிழல்” நிகழச்சித் திட்டத்தின் கீழ் மரம் நடல்

- 2010 மே மாதம் 01ம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள் பூங்காவுக்கு விஜயம் செய்தார்கள்.
- 2010 ஜுலை மாதம் 07ம் திகதி பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய அவர்கள் விஜயம் செய்தார்கள்.




## 4. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு :

### 4.1 அறிமுகம்



பூச்செடிச் செய்கைத் துறையோடு தொடர்பான ஆய்வுகளைச் செய்வதும் பயிற்சி நிகழ்ச்சிகள், கள ஆலோசனை சேவைகள், இத்துறையிலான முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களை வழங்குதல் மற்றும் மாவட்ட மட்டத்தில் பூச்செடிச் செய்கையாளர் சங்கங்களை உருவாக்குதல். உபகரணங்களையும் உள்ளீடுகளையும் வழங்குதல் ஆகிய பணிகள் மூலம் பூச்செடிச் செய்கைத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பதும் இவ்வலகின் பணியாகும்.

அண்மைக்காலமாக பூச்செடிச் செய்கைத் துறையானது இலங்கையில் பெருத்த அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் தொழிற்துறையாக மாறியுள்ளது. மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கும் தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் இத்துறையானது மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். பூச்செடிச் செய்கையில் ஈடுபட்டுள்ளோர் தமது இயலுமைகளைப் புரிந்து கொள்வதற்கும் நிலைபேற்றுத் தன்மை கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் பெரும் இலாபங்களை ஈட்டிக் கொள்வதற்கும் இவ்அலகு உதவுகிறது.

### 4.2. ஆய்வுப் பணிகள்

1. அந்தூரியம் அண்ட்ரீனம் தாவர வகையின் உயிரியல் ரீதியான பெருக்கத்தில் சைட்டோகினின்ஸின் தாக்கம் குறித்த ஆய்வு
2. க்ளோரோ.ஃபைடம் கோமோஸம் தாவரத்தின் உறிஞ்சி உருவாக்கம் மற்றும் தாவரத் தரம் என்பவற்றில் சைட்டோகினின்ஸ் மற்றும் ஒக்ஸின்ஸ் கலவை வெளிவாரியாக இடப்படும் போது ஏற்படும் தாக்கம்.
3. அந்தூரியம் அண்ட்ரீனம் தாவரத்தின் உயிரியல் ரீதியான உறிஞ்சி உருவாக்கத்தில் சைட்டோகினின்ஸ் மற்றும் ஜிபரெல்லிக் அமிலக் கலவையின் தாக்கம்.
4. ட்ராஸியானா கோட்ஸெ.ஃபியானா தாவரத்துக்கான பொருத்தமான வளர் ஊடகம் மற்றும் கலவையைத் தீர்மானித்தல்.
5. கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த அந்தூரியம் விவசாயிகளால் பயன்படுத்தப்படும் விரிவாக்க சேவைகளின் பயனுறுதித் தன்மையைக் கண்டறிதல்.

6. கோர்டிலைன் டேர்மினாலிஸ் தாவரத்தின் நுனி வெட்டுக்களது பூச்சாடி ஆயுள் காலத்தை நீடிக்கச் செய்யும் பொருட்டு அறுவடைக்குப் பின்னர் அவற்றை உளறவைப்பதற்கான பொருத்தமான கலவையைத் தீர்மானித்தல்.
7. ஸமியோகல்கஸ் ஸமினா தாவரத்தின் தண்டு மற்றும் இலை ஆகியன அழகும் நோயைத் தோற்றுவிக்கும் நோய்க்காரணி ஒரு பக்டீரியா என உறுதிப்படுத்தப்பட்டது.
8. ஓ.்.பியோபோகன் இண்டர்மீடியஸ் (சீனப்புல்) தாவரத்தின் உறிஞ்சி உருவாக்கம் இலைகளின் நீளம், மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றில் ஊலவழமமைனெ மற்றும் யரஒைெ ஆகியவற்றின் தாக்கம்.
9. ஜேர்பெரா தாவரத்தின் நுண் அளவிலான வகைகளை உருவாக்குதல்.

### 4.3. கணக்கெடுப்புக்கள்

மாணவர் செயற்திட்டங்கள் என்ற வகையில் பூச்செடிச் செய்கைத் தொழிற்துறை தொடர்பாக பின்வரும் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. கண்டி மாவட்டத்தின் அங்கும்புற, அலவத்துகொடை, கண்டி நகரம், பேராதனை, கம்பளை, கடுகண்ணாவ, ஏதன்துவாவ, கங்கி வட்ட கோரள மற்றும் கட்டுகஸ்தோட்டை ஆகிய தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களின் பூச்செடிச் செய்கைத் தொழிற்துறை பற்றிய கணக்கெடுப்பு.

2. கண்டி மாவட்ட பூச்செடிச் செய்கைத் தொழிற்துறை சார்ந்த பேரளவு மற்றும் நடுத்தர நாற்று மேடைகள் மற்றும் பூ விற்பனை நிலையங்கள் குறித்த கணக்கெடுப்பு.

3. கம்பளை மாவட்ட பூச்செய்கைத் தொழிற்துறை சார்ந்த ஏற்றுமதிக்கான நாற்று மேடைகள் மற்றும் பூ விற்பனை நிலையங்கள் பற்றிய கணக்கெடுப்பு.

### 4.4. வெளியீடுகள்

#### 4.4.1. ஆய்வுகள்

1. ரைஸோ பக்டீரியா தாக்கத்தை ஊக்குவிக்கின்ற தாவரங்களின் வளர்ச்சியில் உயிரியல் பட உருவாக்கத்தின் முக்கியத்துவம். மகேஸ்வரி டீ.கே. தாவர வளர்ச்சியும் சுகாதார ஊக்குவிப்பு பக்டீரியாவும் - நுண் உயிரியல் ஆய்வுகள் 18. ஸ்ப்ரிங்கர் - வெர்லாக், பெலின் ஹெய்டல் பேர்ஸ் ப. 81-96 செனவிரட்ன ஜீ., வீரசேகர, எம்.எல்.எம்.ஓ.டப்ளிவ், செனவிரட்ன கே.ஏ.சீ.என். , ஸவாஹிர் ஜே.எஸ். , கெஷ்க் எஸ்.எம்.எல். , கென்னடி ஐ.ஆர்.

2. 2010 டிசம்பர் மாதம் 13 ம் திகதி இடம் பெற்ற றுகுணு பல்கலைக் கழகத்தின் 07வது விஞ்ஞான ஆய்வரங்களில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கைக்கேயுரிய மூலிகையான எக்ஸகம் ட்ரினேவியம் தாவரத்தின் விதை முளைத்தல் மற்றும் கன்றின் உறுதி ஆகியவற்றில் விதைத்தலுக்கு முந்திய BAP சிகிச்சை முறையின் தாக்கம் பற்றிய ஆய்வுக் கட்டுரை - விதானகே டீ.எஸ்., திஸாநாயக்க என்.பீ., தயானந்த டீ.ஜீ. , கிருஷ்ணராஜா எஸ்.ஏ. , மற்றும் ரூபஸிங்ஹ எம்.கே.

3. மேற்படி ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையில் எக்ஸகம் ட்ரினேவியம் கலப்பின் நிறமூர்த்த வேறுபாடுகள் பற்றிய ஆய்வுக் கட்டுரை விதானகே டீ.எஸ். , தயானந்த டீ.ஜீ., திஸாநாயக்க என்.பீ. , கிருஷ்ணராஜா எஸ்.ஏ. , மற்றும் ரூபஸிங்ஹ எம்.கே.

**4.4.2. ஏனைய வெளியீடுகள்.**

இலவசமாக வநியோகிப்பதற்காக 02 செய்திமடல்களின் தலா 1000 பிரதிகளும் விற்பனைக்காக 10 வகையான கையேடுகளின் தலா 1000 பிரதிகளும் பதிப்பிக்கப்பட்டன.

லங்காதீப செய்திப்பத்திரிகையில் கெடீலியா பயிர்ச்செய்கை பற்றிய ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.





**4.5. (ஓக்கிட் வகைகள் மற்றும் தேசிய தாவரங்களை) வளர்த்தல்.**

- டென்ட்ரோபியம், வெண்டா, ரைனோஸ்டிலிஸ், கெடீலியா மற்றும் பாரிய ஓக்கிட் ஆகிய வகைகளைச் சார்ந்த 48 வகை கலப்பு ஓக்கிட்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் விதைகளிலிருந்து கன்றுகள் முளைப்பிக்கச் செய்யப்பட்டன.
- சிரிட்டா தாவரத்தின் பல்வேறு வகைகளை இணைத்து 09 கலப்பு இனங்கள் உருவாக்கப்பட்டன. அக்ரோட்ரெமா வோல்கரி பூக்கள் ராக்கையிடப்பட்டன. எக்ஸகம் ட்ரினேவியம், எக்ஸகம் அ∴ப்பைன், சிரிட்டா மூனி, அக்ரோட்ரெமா வோல்கரி மற்றும் சிரிட்டா வோல்கரி, சிரிட்டா spp. ஆகியவற்றை இணைத்துப் பெறப்பட்ட ஒரு சிரிட்டா தாவரம் (வெள்ளைப் பூக்கள் கொண்ட) ஆகிய தாவரங்களின் விதைகளிலிருந்து கன்றுகள் உருவாக்கப்பட்டன. அவற்றிலிருந்து 100 எக்ஸகம் அ∴ப்பைன் கன்றுகளும் 55 எக்ஸகம் ட்ரினேவியம் கன்றுகளும் 35 சிரிட்டா கன்றுகளும் 50 அக்ரோட்ரெமா வோல்கரி கன்றுகளும் பெறப்பட்டன.
- சிரிட்டா மூனி , சிரிட்டா ஸெய்லானிகா, சிரிட்டா வோல்கரி, கெண்ட்ரிகியா வோல்கரி, லைஸோபோடியம் ஆகிய தாவரங்களிலிருந்து கன்றுகள் உருவாக்கப்பட்டதோடு சிரிட்டா மூனி, சிரிட்டா ஸெய்லானிகா மற்றும் சிரிட்டா வோல்கரி ஆகிய தாவரங்களின் தண்டுகளின் இணைப்பின் மூலம் புதிய ஹைபிரிட்களும் உருவாக்கப்பட்டன.
- சிரிட்டா ஸெய்லானிகா மற்றும் சிரிட்டா spp. ஆகியவற்றின் கலப்பிலிருந்தும் விதைகள் முளைப்பிக்கச் செய்யப்பட்டதோடு அவை வெள்ளை நிறப் பூக்களைத் தந்தன. அதிலிருந்தும் ஒரு புதிய கலப்பு வகை (ஹைபிரிட்) உருவாக்கப்பட்டு அது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### 4.6 தாவர உற்பத்தி

| பயிர் | தாவரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| **ஓக்கிட்கள்** | **50,522** |
| **அந்தூரியம் கன்றுகள்** | **9750** |
| **அந்தூரியம் திசு உருவாக்கம்** | **7320** |
| **இலைத் தாவரங்கள்** | **38,765** |
| **நீர்த் தாவரங்கள்** | **275** |
| **ஜேர்பெரா** | **2123** |
| **ஏனைய திசு உருவாக்கத் தாவரங்கள்** | **258** |
| **மொத்த தாவர உற்பத்தி** | 109,043 |

### 4.7 ஏனைய பூங்காக்களில் பூச்செடிச் செய்கை அபிவிருத்தி.

#### 4.7.1. கம்பஹா தாவரவியல் பூங்கா

அந்தூரியம் மற்றும் ஓக்கிட்களின் (டெண்ட்ரோபியம்) நுண் தாவரங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் தொடரப்பட்டன. பண்ணத் தாவரங்கள், ஜேர்பெரா மற்றும் நீர்த்தாவரங்கள் சேமிப்புகளுக்கான பொதுப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. விதை செம்மையாக்கப்பட்ட ஓக்கிட்களின் 739 போத்தல்களிலிருந்து 327 சமூகப் பூச்சாடிகள் உருவாக்கப்பட்டன. 339 ஜேர்பெரா கன்றுகளும் வேறு தாவரங்களும் உருவாக்கப்பட்டன.

40 ஆசிரியர்களுக்கும் 602 மாணவர்களுக்கும் உயிரியல் பல்வகைமை மற்றும் தாவரவியல் பூங்காக்களின் பணிகள் என்பன பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. ஜேர்பெரா, அந்தூரியம், ஓக்கிட்கள் மற்றும் இலைத்தாவரங்களின் உண்டுபண்ணுகை பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் 06 ஓக்கிட் உண்டு பண்ணுகை பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டன.

பூச்செடிச் செய்கையைப் பாதிக்கின்ற 10 பீடைகளின் மாதிரிகளும் 10 நோய்களின் மாதிரிகளும் சேகரிக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டன.

#### 4.7.2. உலர் வலய தாவரவியல் பூங்கா – அம்பாந்தோட்டை

ஓக்கிட், அந்தூரியம் மற்றும் அலங்காரத் தாவரங்களின் சேமிப்புக்கள் நன்கு பராமரிக்கப்பட்டன. 32 ஓக்கிட்கள், 04 கள்ளித் தாவரங்கள், 20 அந்தூரியன்கள் 41 அலங்கார மற்றும் இலைத் தாவரங்கள் உள்ளடங்கலாக 97 தாவரங்கள் தாவரச் சேமிப்புக்கு இணைக்கப்பட்டன. நாற்று மேடையில் 100 இலைத் தாவரங்கள் உண்டு பண்ணப்பட்டன.

பல்வேறு இனங்களுக்குரிய 5100 ஓக்கிட்கள் தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. நாற்றுமேடை உருவாக்கத்திற்கான திட்டங்கள் கையளிக்கப்பட்டதோடு அவற்றுக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள 2000 கன்றுகள் பேராதனைப் பூங்காவில் பேணப்பட்டு வருகின்றன.

பேராதனையில் உண்டு பண்ணப்பட்ட 1200 ஓக்கிட் தாவரங்கள் இங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஓக்கிட் இல்லத்துக்கு வழங்கப்பட்டன. மேலும் இப்பூங்காவின் அலுவலர்களுக்கு ஓக்கிட் மற்றும் அந்தூரியம் உண்டு பண்ணுகை பற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டது.

4.7.3. ஹக்கல தாவரவியல் பூங்கா

இந்தியாவின் மும்பாயைச் சேர்ந்த கே.எப். பயோ பிளான்ட்ஸ் நிறுவனத்தால் பரிசாக அனுப்பி வைக்கப்பட்ட 300 லிமோனியம் தாவரங்கள் விற்பனைக்காகவும் பூ வளர்ப்போருக்க பகிர்ந்தளிப்பதற்காகவும் ஹக்கல தாவரவியல் பூங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**4.7.4. ஈரவலய தாவரவியல் பூங்கா – அவிசாவலை**

இப்பூங்காவில் பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் கல்வி மற்றும் பயிற்சிகளுக்கான வசதிகளை புதிதாக ஏற்படுத்தும் பொருட்டு சர்வதேச ஒத்துழைப்புக்கான கொரிய முகவர் நிறுவனத்தின் மூலம் நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டது.

பேராதெனியவில் உருவாக்கப்பட்ட 1200 ஓக்கிட்கள் இப்பூங்காவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வலை இல்லங்களுக்கு வழங்கப்பட்டன. நாற்று மேடைகளில் அந்தூரிய வகைகளை நடுவதற்கும் அவற்றை கொள்வனவு செய்வதற்கும் ஓக்கிட்களை பூச்சாடிகளில் இடவும் ஆவண செய்யப்பட்டது. அலுவலர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

### 4.8 கல்வி மற்றும் பயிற்சி

| விடயம் | காலம் | வகுப்புக்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **ஓக்கிட் வளர்ப்பு** | 01 நாள் | 30 | **873** |
| | செயன்முறைப் பயிற்சி | 20 | **70** |
| **இலைத் தாவரங்கள்** | 01 நாள் | 39 | **1613** |
| | செயன்முறைப் பயிற்சி | 15 | **50** |
| **அந்தூரியம்** | 01 நாள் | 53 | **2115** |
| | செயன்முறைப் பயிற்சி | 35 | **169** |
| **ஜேர்பரா வளர்ப்பு** | 01 நாள் | 11 | **258** |
| **டிஷு உருவாக்கம்** | 05 நாட்கள் | 09 | **55** |
| **வேறு நிகழ்ச்சிகள்** | 01 நாள் | 12 | **431** |
| மொத்தம் | | 224 | 5634 |

திசு உருவாக்கம் சம்பந்தமாக வவுனியாவைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு விரிவுரையொன்று நிகழ்த்தப்பட்டது.

விவசாயத் திணைக்களத்தின் பொலன்னறுவை மாகாணப் பயிற்சி நிலையத்தில் அந்தூரியம் வளர்ப்பு குறித்து அதனை வளர்ப்போர் 27 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இரத்தினபுரி ரஜவக்க பயிற்சி நிலையத்தில் ‘‘பெறுமதி சேர்க்கப்பட்ட தாவரங்கள்’’ பற்றிய செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்புக்கான விவசாய நிறுவகத்தைச் சார்ந்த 15 மாணவர்களுக்க ‘‘பொன்சாய்’’ பற்றிய விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

ரஜவக்க சேவைக்காலப் பயிற்சி நிறுவகத்தில் ஓக்கிட் மற்றும் அந்தூரியம் வளர்ப்பு பற்றிய விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

அந்தூரியம், ஓக்கிட், ரோஸா ஆகிய பூக்களை வளர்த்தல் பற்றியும் நில வடிவமைப்பு பற்றியும் தமிழ் மொழி மூல பயிற்சி நிகழ்ச்சிகள் எல்கடுவ பெருந்தோட்டத்திலும் விவசாய கல்லூரியிலும் நடாத்தப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சார்ந்த மாணவர்கள் 200 க்கும் மேற்பட்டோருக்கு இலைத் தாவரங்கள் அந்தூரியம் மற்றும் ஓக்கிட் வளர்ப்பு பற்றிய செயன்முறைப் பயிற்சி வழங்கப்பட்டது.

### 4.9. ஆலோசனை சேவைகள்

வாரியபொல விவசாய பயிற்சி நிலைய திசு உருவாக்க அலகு, தலவதுகொடை மற்றும் கிரிபத்கொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பூ வளர்ப்பாளர்கள் மூவரது நாற்று மேடைகள் தரிசிக்கப்பட்டு வெளிக்கள ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைக்கப்பட்ட விவசாய மாதிரி செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, பாணந்துறை, ருவினி நீர்த்தாவர நாற்று மேடைக்கு விஜயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

கம்பஹா ‘‘ஹரித’’ தாவர நாற்று மேடையும் தரிசிக்கப்பட்டு வெளிக்கள ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

வர்த்தக ரீதியான பூச்செடிச் செய்கை, நாற்று மேடை முகாமைத்துவம், பீடைகள் மற்றும் நோய்கள் முகாமைத்துவம், ஆய்வு கூட சோதனை முறைத் தாவர உருவாக்கம் தொடர்பான ஆலோசனைகள் இப்பிரிவுக்கு வருகை தந்தவர்களும் தபால் மூலம் தொடர்பு கொண்டவர்களுமாக சுமார் 580 பேருக்கு வழங்கப்பட்டன.

### 4.10. ‘‘சுவஹஸ் மல்’’ நிகழ்ச்சித் திட்டம்

நடுத்தர மற்றும் சிறு அளவிலான பூச்செடிச் செய்கையாளர்களின் பொருளாதார தரத்தை மேம்படுத்துவதற்கென 2005 இல் முன்னெடுக்கப்பட்ட மேற்படி நிகழ்ச்சித் திட்டம் இவ்வருடத்திலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு பூ வளர்ப்போருக்கு பல நன்மைகளை பெற்றுத் தந்தது. இச்சங்கங்களின் கூட்டங்கள் 400 க்கும் அதிகமானவற்றுக்கு இப்பிரிவைச் சார்ந்த அதிகாரிகள் சமூகமளித்தனர்.

புத்தளம், கண்டி, மாத்தளை, கம்பஹா, கேகாலை, நுவரெலியா, களுத்துரை, கொழும்பு, ஊவா ஆகிய பகுதிகளில் 83 சுவஹஸ் மல் சங்கங்கள் இயங்குகின்றன. இவ்வருடத்தில் மாத்தளை படரபொல என்ற இடத்தில் ஒரு சங்கம் உருவாக்கப்பட்டது.

#### 4.10.1. பூ வளர்ப்போரது இயலுமையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்

பூச்செடிச் செய்கையில் ஈடுபடுவோரது இயலுமையையும் சந்தைப்படுத்தலையும் மேம்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் கண்காட்சிகள், தாவர விற்பனைகள், பயிற்சிச் செயலமர்வுகள் ஆகியன ஏற்பாடு செய்யப்பட்டன. அத்தோடு இத்திட்டத்தின் கீழ் பூ வளர்ப்போரது நாற்று மேடைகள் தரிசிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

### அ. கண்காட்சிகள் மற்றும் தாவர விற்பனைகள்

| மாவட்டம் | மாவட்ட மட்டம் - பெரிய | சிறிய உள்ளூர் |
|---|---|---|
| கம்பஹா | 04 | 60 |
| கண்டி | 01 | 02 |
| மாத்தளை | 03 | 01 |
| கேகாலை | 01 | 16 |
| அம்பாந்தோட்டை | 02 | - |
| புத்தளம் | 01 | 06 |
| பண்டாரவலை | - | 01 |
| களுத்துரை | 02 | 02 |
| மொத்தம் | 14 | 88 |



### ஆ. செயலமர்வுகள்

| மாவட்டம் | செயலமர்வுகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| கம்பஹா | 06 | 365 |
| கண்டி | 01 | 75 |
| மாத்தளை | 01 | 50 |
| புத்தளம் | 05 | 70 |
| கேகாலை | 20 | 324 |
| அம்பாந்தோட்டை | 13 | 225 |
| நுவரெலியா | 05 | 128 |
| மொத்தம் | 51 | 1237 |



### இ. தரிசிக்கப்பட்ட நாற்று மேடைகள்

| மாவட்டம் | நாற்று மேடைகளின் எண்ணிக்கை |
|---|---|
| கம்பஹா | 354 |
| கண்டி | 02 |
| மாத்தளை | 16 |
| புத்தளம் | 33 |
| கேகாலை | 111 |
| அம்பாந்தோட்டை | 31 |
| நுவரெலியா | 40 |
| மொத்தம் | 587 |



**ஈ. வேறு நிகழ்ச்சித் திட்டங்கள்**

**புத்தளம் மாவட்டம்**

உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு உதவும் பொருட்டு, சுவஹஸ் மல் அமைப்புக்களைச் சார்ந்த பூ வளர்ப்போர் ஏற்றுமதியாளர்களோடு பிணைக்கப்பட்டனர். ஏற்றுமதியாளர்களுக்காக 6998 தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அதன் மூலம் பூ வளர்ப்போர் ரூபா 112,545.00 ஐ உழைத்தனர்.

**கம்பஹா, கேகாலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்கள்**

இம்மாவட்டங்களைச் சேர்ந்த ‘‘சுவஹஸ் மல்’’ சங்கங்களின் அங்கத்தவர்கள் வேறு பிரதேசங்களில் உள்ள தாவர நாற்று மேடைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வகையில் கம்பஹா, அம்பாந்தோட்டை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ‘‘சுவஹஸ் மல்’’ சங்கங்களின் அங்கத்தவர்கள் பல களப் பயணங்களை மேற்கொண்டனர்.

**4.11 இவ்வலகின் வேறு பணிகள்**

2010 ஜனவரி 07 ம் திகதி முதல் 09 ம் திகதி வரை சீனாவின் குன்மின் பிரதேசத்தில் இடம் பெற்ற ஆசியாவின் பூச்செடிச் செய்கை தொடர்பான பிராந்திய நிபுணத்துவ ஆலோசனைக்கான மாநாட்டில் கலந்து கொண்டு இலங்கையின் பூச்செடிச் செய்கை நிலைமை தொடர்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட ‘‘பிங்கிரிய விவசாய ஏற்றுமதிக் கிராம’’ செயற் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 100 நிழல் இல்லங்கள் அந்தூரியம் மற்றும் இலைத்தாவரங்களை வளர்ப்பதற்கு பொருத்தமானவையா என பரீட்சிக்கப்பட்டது.

‘‘பிங்கிரிய விவசாய ஏற்றுமதிக் கிராம’’ செயற்திட்டத்தின் பங்குபற்றுவதற்கு தகுதியான தனி நபர்களை தேர்ந்தெடுக்கும் பொருட்டு 31 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 183 இடங்கள் பரீட்சிக்கப்பட்டன. அவற்றுள் 57 பேர் தகுதி காணப்பட்டனர். அந்தூரியம் பூக்களை பூச்சாடியில் இடல் தொடர்பாக 70 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

## 5. தேசிய தாவரவியல் கூடம்

### 5.1. அறிமுகம்

இலங்கையினதும் மற்றும் வெளிநாடுகளதும் தாவரங்களின் உலர்ந்த தாவரவியல் கூட மாதிரிகளை முறையான ஆய்வுகளுக்காக பாதுகாத்து வைக்கும் இடமே தேசிய தாவரவியல் கூடமாகும்.

இங்கு 148,000 க்கும் அதிகமான தாவரவியல்கூட மாதிரிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தாவரங்கள் பற்றிய 3500 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இதன் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.



தாவரக் கண்டுபிடிப்பு, அடையாளம் காணல், மாதிரி தயாரித்தல், ஆவணப்படுத்தல் மற்றும் நாட்டின் தாவரச் செல்வத்தை மீள் பரிசீலித்தல் ஆகிய பணிகளை தேசிய தாவரவியல் கூடம் மேற்கொள்கிறது. உணவு மற்றும் விவசாய தேவைகளுக்கான தாவர வளங்களை கணக்கெடுப்பதன் மூலமும் பதிவு செய்வதன் மூலமும் இந்நிறுவனமானது நாட்டின் தேசிய அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்புச் செய்கிறது.

இந்நிறுவனமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்களுக்கு தாவரங்களை வகைப்படுத்துதல் தொடர்பான ஆய்வுப் பணிகளுக்கு வசதி செய்து கொடுப்பதோடு தாவர மற்றும் தாவரப் பொருள்களை ஏற்றிறக்குமதியின் போது எழும் சட்டப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சுங்கத் திணைக்களத்துக்கு உதவுகிறது. அண்மையில் இந்நிறுவனமானது, இலங்கையின் தாவரங்களை சிவப்புப் பட்டியல் இடும் அதிகார சபையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தேசிய தாவரவியல் கூடமானது உலகின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த தாவரவியல் ஆய்வு நிறுவனங்களுடன் அறிவையும் தாவர மாதிரிகளையும் பரிமாறிக் கொள்ளும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

### 5.2 தாவரக்கண்டுபிடிப்பு மற்றும் பூங்காவியல் ஆய்வு

#### 5.2.1. களப்பயணம்

பின்வரும் களப்பயணங்களும் தாவரச் சேமிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டு பல மாதிரிகள் அடையாளம் காணப்பட்டு ஸ்லைடுகள் உருவாக்கப்பட்டு தேசிய தாவரவியல் கூடத்திலும் வேறு பூங்காக்களில் உள்ள அதன் கிளைகளிலும் உள்ள சேமிப்போடு இணைக்கப்பட்டன.



| இடம் | களப் பயணங்களின் எண்ணிக்கை | சேகரிக்கப்பட்ட மாதிரிகள் | | |
|---|---|---|---|---|
| | | உயர் தாவரங்கள் | பாசித் தாவரங்கள் | பன்னத் தாவரங்கள் |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | 02 | _ | 83 | - |
| நக்ள்ஸ், கோர்பட் இடைவெளி | 01 | 25 | 30 | - |
| வேஉடகன்த வன சேமிப்பு | 01 | 44 | 30 | 05 |
| தொலஸ்பாக – ரக்ஸாவ | 01 | 20 | 61 | |
| கிதுல்கல வனசேமிப்பு | 01 | 50 | 49 | 10 |

#### 2.2. அடையாளம் காணலும் செறிவாக்கலும்

| சேகரிப்பின் வகை | மூலம் | மாதிரிகளின் எண்ணிக்கை | | செறிவாக்கல் |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டவை | வேறு படுத்தி சேர்க்கப்பட்டவை | |
| **உயர் தாவரங்கள்** | கிதுல்கல, நக்ள்ஸ், கலாபொக்க, லூல்கந்துர, சிவனொளிபாதமலை, உன்னஸ்கிரிய ஆகிய பகுதிகளிலான களப் பயணங்கள் | 148 | 148 | NH-PDA |
| | கலாநிதிக் கற்கை மாணவர் Suman Neupane ன் சேகரிப்பு | 82 | 82 | NH-PDA |
| | கலாநிதி எம். ஜயசூரிய அவர்களது கன்னெளிய மற்றும் சிங்கராஜ பகுதிகளிலிருந்தான சேகரிப்பு | 286 | 420 | NH-PDA |
| | கலாநிதி சிங்ஹகுமாரவின் சேகரிப்பு | | 206 | NH-PDA |
| | பேராசிரியர் எஸ். குணதிலக்கவின் சேகரிப்பு | | 1330 | NH-PDA |
| | திரு எம்.எம்.டீ.ஜே. சேனாரத்னவின் சேகரிப்பு | | 155 | NH-PDA |

| சேகரிப்பின் வகை | மூலம் | மாதிரிகளின் எண்ணிக்கை | | செறிவாக்கல் |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டவை | வேறு படுத்தி சேர்க்கப்பட்டவை | |
| | கலாநிதி டீ.எஸ்.ஏ. விஜயசுந்தர மற்றும் திரு ஸீ. ஜயசிங்ஹ ஆகியோர் நில்கல பகுதியில் சேகரித்தவை | | 28 | NH-PDA |
| | திரு. எஸ். பெர்னான்டோவின் சேகரிப்பு | 05 | 05 | NH-PDA |
| | வவுச்சர் மாதிரிகளாக வைப்பிலிடப்பட்டவை | 24 | 24 | NH-PDA |
| | தாவர செயற்திட்டம் | | 445 | NH-PDA |
| **பாசித் தாவரங்கள்** | ஹக்கல களப்பயணக் கண்டுபிடிப்பு | 105 | 35<br>70 | NH-PDA<br>ஹக்கல |
| | ரங்கல – கோர்பட்டின் இடைவெளி | 23 | 23 | NH-PDA |
| | அம்பகமுவ களப்பயணக் கண்டுபிடிப்பு | 48 | 48 | NH-PDA |
| | தொலஸ்பாக – ரக்ஷாவ | 50 | 50 | NH-PDA |
| | உன்னஸ்கிரிய களப்பயணக் கண்டுபிடிப்பு | 45 | 45 | NH-PDA |
| **பன்னத் தாவரங்கள்** | பன்னத் தாவர செயற்திட்டம் | | 965 | NH-PDA |
| | பேராசிரியர் எஸ். குணதிலக்கவின் சேகரிப்பு | | 59 | NH-PDA |

### 5.3 தாவரவியல் தகவல் பரப்புகையும் சான்றுப்படுத்தலும்

பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் அவர்களது வேண்டுகோளின் பேரில் சரியான தாவரவியல் தகவல்கள் வழங்கப்பட்டன.

#### 5.3.1. பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள்

- இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக, விவசாயத் திணைக்களத்தின் சட்டப் பிரிவுக்கு 17 தாவர மாதிரிகள் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டன.
- பொதுமக்களின் வேண்டுகோளுக்கேற்ப 1511 உயர் தாவரங்களும் 366 பாசித் தாவரங்களும் அடையாளம் காணப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டன.
- 179 பாடசாலை மாணவர்களும் 370 பல்கலைக்கழக மாணவர்களும் 349 வேறு நிறுவனங்களும் தாவரவியல் கூடத்துக்கு விஜயம் மேற்கொண்டு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொண்டனர்.

### 5.3.2. தரவுத் தளத்தைத் தயாரித்தல்

70 குடும்பங்களுக்கான 3291 பதிவுகளுடன் பாசித் தாவரங்களுக்கான வவுச்சர் மாதிரிகளைப் பயன்படுத்தி தரவுத் தளம் உருவாக்கப்பட்டது.

1400 மாதிரிகளும் இலங்கைக்கே உரிய 05 தாவரங்கள் குறித்து அவற்றின் இடப்பெயர்ச்சியில் தட்ப வெப்ப நிலையின் பாதிப்பு பற்றிய ஆய்வும் பேராதனை தாவரவியல் பூங்காவில் பதியப்பட்டது.

### 5.3.3. தேசிய சிவப்புப் பட்டியலிடும் செயற்திட்டம்

தேசிய ரீதியாகவும் பூகோள ரீதியாகவும் அழிவுறும் அச்சத்துக்குட்பட்டுள்ள தாவரங்கள் குறித்த தேசிய சிவப்புத் தரவு புத்தகத்தை தயாரிப்பதற்குத் தேவையான மாதிரி மதிப்பீடும் தகவல் தொகுப்பும் பின்வருமாறு இடம்பெற்றது.

<table>
<tr><th>விபரம்</th><th>பதிவுகள்</th><th>ஈடுபட்ட நபர்கள்</th></tr>
<tr><td>தேசிய சிவப்புப் பட்டியலிடல் மதிப்பீட்டுக்கான படிப்படியான வளர்ச்சியைப் பெற்ற வகைகள்</td><td>1665</td><td rowspan="4">1. கலாநிதி டீ.எஸ்.ஏ. விஜயசுந்தர<br>2. திரு டீ.எம்.யூ.பீ. தனசேகர<br>3. கலாநிதி ஏ.எம்.ஏ.எஸ். அத்தனாயக்க<br>4. திருமதி ஆர்.ஏ.எஸ்.டப்ளிவ். ரனசிங்ஹ<br>5. திருமதி என்.பீ.டீ. குனவர்தன<br>6. திருமதி ஜீ. பொன்சேகா<br>7. சூழலியல் அமைச்சால் நிதி வழங்கப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட தரவு தயாரிப்பாளர்கள் 06 பேர்</td></tr>
<tr><td>தேசிய சிவப்புப் பட்டியலிடல் மதிப்பீட்டுக்கான பன்னத் தாவர வகைகள்</td><td>29</td></tr>
<tr><td>குடும்பங்களின் எண்ணிக்கை</td><td>116</td></tr>
<tr><td>மொத்தப் பதிவுகள்</td><td>46253</td></tr>
</table>

பல்கலைக்கழகங்கள், உயிரியல் பல்வகைமை செயலகம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த நிபுணர்களின் பங்குபற்றுதலோடு 127 குடும்பங்களைச் சேர்ந்த 1111 வகைகள் தேசிய சிவப்புத் தரவுப் புத்தகத்துக்காக மதிப்பிடப்பட்டன.

### 5.4. பயிற்சி மற்றும் கல்வி

தாவரக்கண்டுபிடிப்பு, அடையாளம் காணல், பெயரிடல், தாவரவியல் கூட முகாமைத்துவம், உயிரியல் பல்வகைமை மற்றும் பேணுகை பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள், விரிவுரைகள், செயலமர்வுகள் மற்றும் ஒன்று கூடல்கள் பின்வரும் வகையில் இவ்வருடம் நடாத்தப்பட்டன.



**5.4.1. பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் விரிவுரைகள்**

| விபரம் | விடயம் | இலக்குக் குழு / நிறுவனம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சிகள் | தாவரவியல் கூட வரலாறு, தாவரக் கண்டுபிடிப்பு மற்றும் தாவரவியல் கூட நுட்பங்கள் | பாடசாலை மாணவர்கள், | 224 |
| | | பல்கலைக்கழக மாணவர்கள் | 175 |
| | | வனவிலங்குத் திணைக்களம் | 94 |
| | | பயிலுனர்கள் (பேராதனை தாவரவியல் பூங்கா) மற்றும் வேறு நிறுவனங்கள் | 149 |
| ஒரு நாள் விரிவுரைகள் | உயிரியல் பல்வகைமை மற்றும் தாவர வகைப்படுத்தல் | பேராதனை தாவரவியல் பூங்கா பயிலுனர்கள் | 09 |
| | மருத்துவத் தாவரங்களையும் அவற்றை ஒத்த தாவரங்களையும் அவற்றின் வாழிடங்களையும் அடையாளம் காணல் | பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்கள் | 100 |
| | கிராமிய அபிவிருத்தியின் போது தாவரப் பேணுகையின் முக்கியத்துவம் | கமிதிரிய அமைப்பின் கீழ் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார மேம்படுத்தல் செயற்திட்டத்தில் பங்குபற்றியோர் | 29 |
| விஷேட கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதலும் ஒருங்கிணைத்தலும் (இரண்டு வார மற்றும் ஒரு வார நிகழ்ச்சிகள்) | தாவரவியல் கூடம் மற்றும் அரச தாவரவியல் பூங்கா ஆகியவற்றின் பணிகள் | பேராதனை பல்கலைக் கழக தாவரவியல் திணைக்கள மூன்றாம் வருட விஷேட மாணவர்கள் | 11 |
| | | களனி பல்கலைக்கழக பயிலுனர் மாணவர்கள் | 3 |
| | | வயம்ப பல்கலைக் கழக மாணவன் | 1 |

#### 5.4.2. செயலமர்வுகளும் சந்திப்புக்களும்

கொழும்பு, பேராதனை, ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்கள், அடிப்படை ஆய்வுகளுக்கான நிறுவனம், தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய தாவரவியல் கூடம் ஆகியவற்றின் கல்விசார் பணியாளர்களுக்கு வியன்னா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களான ரோஸ் சாமுவேல் மற்றும் ஹென்னா ஸ்ச்னீவீஸ் ஆகியோர் இலங்கைத் தாவரங்களின் நிறமூர்த்த கணிப்பீடு பற்றிய 5 நாள் செயலமர்வை நடாத்தினர்.

### 5.5. தாவரவியல் கூட மாதிரிகளின் பொதுப்பராமரிப்பு

| பணி | எண்ணிக்கை |
|---|---|
| தாவரவியல் கூட மாதிரிகளை பழுதுபார்த்தலும் பெருக்குதலும் | 18,855 |
| பூச்சிப் பாதிப்புக்குட்பட்ட மாதிரிகளுக்கு சிகிச்சையளித்தல் (நஞ்சூட்டல்) | 452 |
| மாதிரிகளை ஆழ் குளிர் சாதனப் பெட்டியில் இடல் | 3,926 |
| மாதிரிகளை பெருக்குதல் | 818 |
| மாதிரிகளை மீள்பெருக்குதல் | 138 |
| வகைகளுக்கு அட்டையிடல் | 1298 |
| தாவர இன அட்டையிடல் | 761 |
| மாதிரிகளை துப்புரவாக்குதல் | 28,694 |
| புத்தகங்களை துப்புரவாக்குதல் | 540 |
| அழுத்த மாதிரிகள் | 573 |
| குறிச்சொற்கள் இடல் | 520 |
| லேபல் இடல் | 969 |
| அட்டைகளுக்கு லேபல் இடல் | 511 |
| நப்தலீன் பைகளை இடல் | 125 கி.கி |
| புதிய சேகரிப்புகளுக்கான புதிய பெயர் பலகைகளை மீளமைத்தல் | 50 |

## 6. ஹக்கல தாவரவியல் பூங்கா

### 6.1. அறிமுகம்


இலங்கையில் சிங்கோனா பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கென 1861 இல் ஹக்கல தாவரவியல் பூங்கா உருவாக்கப்பட்டது. இது இலங்கையின் இரண்டாவது பெரிய தாவரவியல் பூங்காவாகும். நுவரெலியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் பிரதமர் வாசஸ்தலம் ஆகியன ஹக்கல தாவரவியல் பூங்காவினாலேயே நிர்வகிக்கப்படுகிறது. இப்பூங்காவனது நுவரெலியா பதுளை வீதியில் நுவரெலியாவிலிருந்து 9.5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பு 27 ஹெக்டேயர்களாகும்.



### 6.2. தாவர உற்பத்தி

பொலி டனல்கள் கொண்ட இரு நாற்று மேடைகளிலும் தாவரப் பெருக்கத்துக்கான தாவர இல்லத்திலும் தாவர உற்பத்தி பிரதானமாக மேற்கொள்ளப்பட்டது. வெட்டுப் பூக்களுக்கான செடிகள் பொலி டனல்களிலும் திறந்த வெளியிலும் பேணப்பட்டன.

77,806 தாவரங்கள் பல்வேறு அளவினதான பூச்சாடிகளில் உருவாக்கப்பட்டது. இவை விற்பனைக்காகவும் பூங்காவில் நடுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டன. பூச்சாடித் தாவரங்களாக 71,754 தாவரங்கள் விற்பனை செய்யப்பட்டன.



பூங்காவின் நாற்று மேடைகளிலிருந்து 16.878 கிலோ கிராம் விதைகள் சேகரிக்கப்பட்டு விற்பனைக்கும் பூங்காவில் நடுவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

9460 பூ விதைப் பொதிகள் தயாரிக்கப்பட்டு 5045 பொதிகள் விற்கப்பட்டன. 4177 பொதிகள் பூங்காவின் அலங்காரத்தை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டன.

**6.3 தாவர வெளிவாரிப் பேணுகை, தாவரக் கண்டுபிடிப்பு**

பூங்காவில் தாவரங்களின் சேகரிப்பினை வெளிநாட்டு, தேசிய, இந்நாட்டுக்கே உரிய, அருமையான, அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ள ஆகிய பல்வகை தாவரங்களையும் கொண்டு வளப்படுத்துவதனை பிரதான இலக்குகளில் ஒன்றாகக் கொண்டு மலை நாட்டுத் தாவரங்களை துணை வெப்பவலய காலநிலையின் கீழ் வெளிவாரிப் பேணுகை முறையில் பேணிப்பாதுகாக்கும் நடைமுறை கடைபிடிக்கப்படுகிறது.

பூங்காவின் தாவர வகைச் சேகரிப்பை வளப்படுத்தும் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- பூங்காவின் மரத்தோட்டத்தில் 32 வகைகளுக்குரிய 366 தாவரங்கள் நடப்பட்டன.
- கடும் காற்றின் காரணமாக விழுந்த மரங்கள் அகற்றப்பட்டன.
- தேவையான இடங்களில் கிளைகள் அகற்றப்பட்டன.
- நாற்று மேடைக்கு புதிய தாவரங்கள் இணைக்கப்பட்டன.
- 350 மர லேபல்களும் 40 தகவல் படிவங்களும் பொருத்தப்பட்டன.
- பன்னத் தாவரத்தின் 8 வகைகளைப் பயன்படுத்தி 20 நாற்று மேடைகள் மீள்நடப்பட்டன.

பூங்காவிலிருந்தும் வெளியிலிருந்தும் சேகரிக்கப்பட்ட உள்நாட்டுத் தாவரங்களும் விதைகளும் பூங்கா பொறுப்பாளர் விடுதிக்கு அண்மையிலுள்ள நிழல் இல்லத்தில் நடப்பட்டன. இந்நிழல் இல்லத்தில் 912 தாவரக் கன்றுகள் பேணப்பட்டதோடு நாற்று மேடைக்கு 312 கன்றுகள் இணைக்கப்பட்டன.



நாற்று மேடையில் வளரும் தாவரக் கன்றுகள்

### 6.4. பயிற்சி மற்றும் கல்வி

பூச்செடிச் செய்கை மற்றும் நிலவடிவமைப்புத் துறையில் 334 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

| கற்கை நெறிகள் | மாணவர்கள் | டிப்ளோமா / பல்கலைக்கழக மாணவர்கள் | அரசாங்க உத்தியோகத்தர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நிலவடிவமைப்பு | | 53 | 45 | **98** |
| பூச்செடிச் செய்கை | | 122 | 35 | **157** |
| உயிரியல் பல்வகைமை | 66 | | 08 | **74** |
| பாடசாலை செயற்திட்டம் | 5 | | | **5** |
| **மொத்தம்** | **71** | **175** | **88** | **334** |

நுவரெலியா ஜேவுயு பிராந்திய அலுவலகத்தில் பூச்செடிச் செய்கை மற்றும் நிலவடிவமைப்புத் தொடர்பான 06 மாத பயிற்சி நெறி ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. 07 மாணவர்கள் வெற்றிகரமாக இக்கற்கை நெறியை பூர்த்தி செய்தனர்.

### 6.5. அபிவிருத்திப் பணிகள்

#### 6.5.1 காணி அபிவிருத்தி

- பன்னத் தாவரத்தோட்டத்தின் உள் வீதிகள் கொங்கிரீட் கற்கள் இடப்பட்டு வடிவமைக்கப்பட்டது.
- ஜப்பானியத் தோட்டத்தின் சிறுகுளம் திருத்தியமைக்கப்பட்டது.
- பாறைத் தோட்டத்தின் ஒற்றையடிப் பாதைகள் புதுப்பிக்கப்பட்டன.
- பிரதான நுழைவாயில் பாதையின் இரு பக்கங்களும் மீள் வடிவமைக்கப்பட்டன.





### 6.5.2 கீழ்கட்டுமான அபிவிருத்தி

- கீழ் பூந்தோட்டத்தின் நொக் ஞாபகார்த்த பொதுக் கழிவறைக்கான குழியின் வேளைகள் பூரணப்படுத்தப்பட்டன.
- 06 நிழல் இல்லங்களுக்கும் அலுவலகம், களஞ்சிய சாலைகள், சுவர்கள், 04 குளங்கள், 03 நுழைவாயில்கள் நிறம் பூசப்பட்டன.
- சுற்றுலா விடுதியின் நிலத்துக்கு பலகையிடும் பணி பூரணப்படுத்தப்பட்டது.
- தொழிலாளர் விடுதிகள் பழுத பார்க்கப்பட்டன.
- 1 கிலோ மீற்றர் நீளத்துக்கு பிரதான வீதி புனரமைக்கப்பட்டது.



சுற்றுலா விடுதியின் நிலத்துக்கு பலகையிடலும் புதிய தளபாடங்களும்



புனரமைக்கப்பட்ட தொழிலாளர் இல்லங்கள்



புதிய கூரையுடனான தாவர இல்லம்

### 6.6. ஏனைய பணிகள்

- புத்தள சுதந்திரதின விழா மேடையை அலங்கரிப்பதற்காக 3000 சாடித் தாவரங்கள் தயாரிக்கப்பட்டன.
- அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் இரண்டாவது பதவிப் பிரமாணத்தை கொண்டாடும் முகமாக 113 மரக்கன்றுகள் நடப்பட்டன.
- 27 பெயர்ப்பலகைகள், 3 வரைபடங்கள் மற்றும் 07 அடையாளப் பலகைகள் பார்வையாளர் வசதி கருதி பொருத்தப்பட்டன.
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட 20 ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு 2010.09.27 ம் திகதி இடம்பெற்றது.
- சீதாஎலிய ஆய்வு நிலையத்தில் இடம்பெற்ற கண்காட்சியில் ஒரு கண்காட்சிக் கூடம் ஏற்படுத்தப்பட்டது.

### 6.7. விஷேட அதிதிகள்

- பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய அவர்கள் 2010.05.08 ம் திகதி பூங்காவுக்கு விஜயம் செய்தார்கள்.
- 2010.10.23 ம் திகதி இலங்கைக்கான நேபாளத் தூதுவர் விஜயம் செய்தார்.
- 2010.10.24 ம் திகதி இலங்கைக்கான பங்களாதேஷ் தூதுவர் விஜயம் செய்தார்.

## 7. கம்பஹா தாவரவியல் பூங்கா

### 7.1. அறிமுகம்

கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா 1876 ல் றப்பர் பயிர்ச்செய்கையை இலங்கையில் ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இது கம்பஹா நகரத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் கம்பஹா மினுவங்கொடை பாதையில் அமைந்துள்ளது. இது 43 ஏக்கர் பரப்பைக் கொண்டது. இப்பூங்காவனது வருடத்துக்கு சுமார் 150,000 க்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு பார்வையாளர்களால் தரிசிக்கப்படுகிறது.



பிரதேசத்தின் உயிரியல் பல்வகைமையை பாதுகாக்கும் பொருட்டான தாவர வெளிவாரிப் பேணுகை, பூச்செடிச் செய்கை மற்றும் நிலவடிவமைப்பு பற்றிய கல்வி மற்றும் நீடிப்பு சேவைகள், தாவரவியல் தகவல் பரத்துகை, அலங்கார தாவரவியலை ஊக்குவிப்பதற்கான பூச்செடிச் செய்கை மற்றும் திசு உருவாக்கம் தொடர்பான ஆய்வுகள், மத மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை பாதுகாத்தல், விற்பனைக்கான தாவர உற்பத்தி, மலர் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல் போன்றன இப்பூங்காவின் பிரதான பணிகளாகும்.

### 7.2. கீழ்கட்டுமான அபிவிருத்தி

பின்வரும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- குளப் பக்கத்தில் இருந்தான புதிய பிரதான நுழைவாயிலின் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டன.
- சுமார் 500 மீற்றர் நீளமான உள்ளக வீதிகளுக்கு தாரிடப்பட்டது.
- புதிய கழிவறை கட்டிடத் தொகுதி பூரணப்படுத்தப்பட்டது.




- பிரதான நுழைவாயிலுக்கு அண்மையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான தரிப்பிடம் புனரமைக்கப்பட்டது.
- மரக்குடில் அபிவிருத்தி செய்யப்பட்டது.
- புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நீர்ப்பூங்காவில் மூன்று மிதி வள்ளங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.



**7.3. தாவர உற்பத்தி**

பெருமாளவிலான தாவரங்கள் விற்பனைக்கென உருவாக்கப்பட்டன.



**7.4. கல்வி மற்றும் பயிற்சி**

பின்வரும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

| வகை | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| அந்தூரியம் | 10 | 291 |
| ஓக்கிட் | 09 | 105 |
| இலைத் தாவரம் | 08 | 38 |
| ஜேர்பெரா | 08 | 40 |
| நாற்று மேடை முகாமைத்துவம் | 03 | 106 |
| நிலவடிவமைப்பு பூங்காவியல் | 09 | 33 |
| வேறு | 16 | 926 |
| மொத்தம் | 63 | 1539 |

சுவஹஸ் மல் செயற்திட்டத்தின் கீழ் பின்வரும் செயலமர்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

| விடயம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை | செயலமர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| உயிரியல் பல்வகைமை | 143 | 05 |
| உரவகை | 190 | 03 |

## 8. மூலிகைத் தாவரப் பூங்கா – கனேவத்த

### 8.1. அறிமுகம்

இப்பூங்காவானது வடமேல் மாகாணத்தில் குருநாகல் நகரிலிருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இடைவலயத்தில் அமைந்திருப்பதால் மருந்து மூலிகைப் பயிர்ச்செய்கைக்கு உகந்த தன்மைகளை இது பெற்றிருக்கிறது. 52 ஏக்கர் கொண்ட இப்பூங்காவின் சுமார் அரை வாசியில் தென்னையும் மீதி 22 ஏக்கர்களில் மூலிகைகளும் பயிரிடப்பட்டுள்ளன.



இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாத, அரிய மூலிகைகளை பேணிப்பாதுகாப்பதும் மருந்து மூலிகைகளை முறையாக வளர்த்துச் சேமிப்பதும் இப்பூங்காவின் நோக்கங்களாகும்.

### 8.2. 2010 ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

பாதை மற்றும் காணி அபிவிருத்தி, வேலியமைத்தல், நிழல் கூடாரங்கள், வாகனம் நிறுத்துமிடம் அலுவலர் தங்குமிடமமைத்தல் ஆகிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு தாவர நடுகை நிகழ்ச்சித் திட்டமும் முடுக்கி விடப்பட்டது. 16,731 தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு 11,329 தாவரங்கள் விற்கப்பட்டன.

மூலிகை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் அவற்றின் பாதுகாப்பு மற்றும் பாவனை பற்றி அறிந்து கொள்ளவும் என 395 பேர் இங்கு வருகை தந்ததோடு, தமது தேவைகளுக்காக மருந்து மூலிகைகளைப் பெற்றுக் கொள்ள 49 பேர் வருகை தந்தனர்.

## 9. உலர் வலய தாவரவியல் பூங்கா – அம்பாந்தோட்டை

### 9.1. அறிமுகம்

இப்பூங்காவானது 130 வருடங்களுக்குப் பிறகு உள்நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது பூங்காவாகும். இது தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ளது. இதன் அபிவிருத்திப் பணிகள் 2006 ல் ஆரம்பித்தன.



உலர் வலய காடு வளர்ப்பானது பல்வேறு மனித நடவடிக்கைகள் காரணமாக வேகமாக மறைந்து வருவதை நாம் பார்க்கிறோம். குறிப்பாக கடந்த 30 வருடங்களில் அம்பாந்தோட்டை பிரதேசத்தில் உலர் வலயக் காடு வளர்ப்பானது 98 % வீதத்தால் இழக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவின் பிரதான நோக்கங்கள் உலர் மற்றும் அதிஉலர் வலய தாவரங்களை குறுகிய மற்றும் நீண்ட காலங்களில் வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் பேணிப்பாதுகாப்பதும் உலர் வலயத்தின் மிகவும் குறைவாக அறியப்பட்ட மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் தாவரங்கள் பற்றிய ஆய்வுகளைச் செய்வதும் மூலிகைக் கைத்தொழிலை ஊக்குவிப்பதும் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதும் உலர் வலயத்தில் தாவரவியல் மற்றும் பூச்செடிச் செய்கை கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதுமாகும்.

### 9.2. 2010 ல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்



உள்ளக வீதிகள் புனரமைக்கப்பட்டன. பூங்காவின் நாற்று மேடைகளுக்கான உள்ளக நீர்ப்பாய்ச்சல் முறைமை நிறைவு செய்யப்பட்டது. புதிய கள அலுவலகமும் விடுதியும் நான்கு நிழல் இல்லங்களும் நிர்மாணிக்கப்பட்டு பூங்காவின் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் தரத்தையும் இயலுமையையும் மேம்படுத்த ஆவன செய்யப்பட்டது.



உள்ளக குளங்கள் இரண்டும் மேம்படுத்தப்பட்டு நீர் விநியோக முறைமையும் இடி பாதுகாப்பு பொறிமுறையும் சம்பூரணப்படுத்தப்பட்டது.




காலநிலை தரவுகளை முறையாக அவதானிப்பதற்கான காலநிலை அவதான நிலையமும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. 45 இரும்பு மேசைகளும் 284 சீமேந்து பூச்சாடிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நில வடிவமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

12 உள்நாட்டு வகைகளுக்குரிய 68 தனித்தாவரங்கள் இப்பூங்காவின் உயிரியல் சேமிப்புக்கு இணைக்கப்பட்டன. 5975 அலங்காரத் தாவரங்களும் 90 வனத் தாவரங்களும் உருவாக்கப்பட்டன. அத்தோடு 50 அந்தூரியம் 40 ஓக்கிட் தாவரங்களும் 500 உள்ளக மற்றும் வெளிக்களத் தாவரங்களும் நாற்று மேடைகளில் உருவாக்கப்பட்டன. பூங்காவின் மரத் தோட்டத்திலும் ஒழுங்கைகளிலும் 203 வனத் தாவரங்களும் 2730 அலங்காரத் தாவரங்களும் நடப்பட்டன.



**10. ஈரவலய தாவரவியல் பூங்கா – அவிசாவலை**

**10.1. அறிமுகம்**



இப்பூங்காவானது மேல்மாகாணத்தின் அவிசாவலையில் இலுக்ஓவிட்ட பகுதியில் 62 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. அழிவுறும் அச்சத்துக்குட்பட்டுள்ள இப்பிரதேசத்தின் தாவரங்கள் இதன் மூலம் பாதுகாக்கப்படும். அத்தோடு சுற்றுலாத் துறையை மேம்படுத்துவ தற்கும் நாட்டின் பூச்செடிச் செய்கை தொழில் துறையில் வளர்ச்சிக்கும் இது பங்களிப்புச் செய்யும். இப்பூங்காவானது தாவரவியல் மற்றும் சூழலியல் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் ஓர் ஆய்வு கூடமாக தொழிற்படுகிறது. இப்பூங்காவின் பிரதான நோக்கம் தாழ் நில ஈரவலயத் தாவரங்களை வெளிவாரி பேணுகை முறைமையின் கீழ் பேணிப் பாதுகாப்பதும் ஈரவலய நில வடிவமைப்பை மேம்படுத்துவதுமாகும்.

**10.2. 2010 ல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**



நில வடிவமைப்புக்காக கட்டுமானங்கள் ஏற்படுத்தப்பட்டன. 2 தொடக்கம் 3 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் புல் வளர்த்து பெரும் புல்வெளியொன்று ஏற்படுத்தப்பட்டது. இங்கு காணப்படும் 3 நீர்ச்சுணைகளையும் உள்ளடக்கி குபுக் மரங்களுடனான நீர்த்தோட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இப்பூங்காவில் சிறிய குளங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன. அத்தோடு புதிய அலுவலக கட்டிட வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டன.




பொலி டனல்களில் பத்செடிச் செய்கை நாற்று மேடைகள் உருவாக்கப்பட்டு அந்தூரியம் மற்றும் ஓக்கிட்கள் பயிரிடப்பட்டன. நாற்று மேடைகளில் 500 மெரங்கி வெள்ளைத் தாவரங்களும் 500 கலிஸ்ட்டோ சிவப்புத் தாவரங்களும் பேணப்பட்டன. இரண்டு அங்குல அளவிலான சாடியில் நடப்பட்ட ஓக்கிட்கள் ஆரோக்கியமாக இங்கு பேணப்பட்டன.



**11. அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரின் வாசஸ்தலப் பூங்காக்கள்.**



கொழும்பு, கண்டி, அநுராதபுரம் மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் உள்ள அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரின் வாசஸ்தலப் பூங்காக்கள் உயர் தரத்தில் பேணப்பட்டன.

மாண்புமிகு பிரதமர் அவர்களின் கொழும்பு வாசஸ்தல அபிவிருத்திப் பணிகள் வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டதோடு கண்டி ஜனாதிபதி மாளிகையின் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதியில் நில வடிவமைப்பு பணிகள் பூரணப்படுத்தப்பட்டு தேவையான உபகரணங்களும் இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.





**12. பொதுநலவாய போர் சமாதிகள்**

கண்டி, ஜாவத்த, பொரல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பொதுநலவாய போர் சமாதிகள் உயர் தரத்தில் பேணப்பட்டன. ஜாவத்த, பொரல்ல மற்றும் கண்டி போர் சமாதிகள் மேம்படுத்தப்பட்டதோடு திருகோணமலை போர் சமாதியில் புதிய நீர் தெளித்தல் கருவிகள் பொருத்தப்பட்டன.



மேம்படுத்தப்பட்ட போர் சமாதி ஜாவத்த



மேம்படுத்தப்பட்ட போர் சமாதி கண்டி



மேம்படுத்தப்பட்ட போர் சமாதி திருகோணமலை







திருகோணமலை போர் சமாதியில் புதிதாக அமைக்கப்பட்ட நீர் தெளித்தல் பொறிமுறை

**2011 ம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள பணிகள்**

| மகிந்த சிந்தனை வேலைத்திட்டம் | திட்டமிடப்பட்டுள்ள பணிகள் |
|---|---|
| சூழலியல் பாதுகாப்பு மற்றும் சூழல் நட்பு சுற்றுலாத்துறை ஊக்குவிப்புக்கான நிலையானதோர் கொள்கை | தாழ் நில உலர் வலய தாவரங்களின் பேணுகைக்கென ஆரம்பிக்கப்பட்ட மிரிஜ்ஜவில தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்தல்.<br>1. நிழல் இல்லங்களை நிர்மாணித்தல்<br>2. நுழைவாயில் கட்டிடத் தொகுதி மற்றும் வாகனத் தரிப்பிட நிர்மாணம்<br>3. பூச்செடிச் செய்கைப் பிரிவுக்கான அலுவலக நிர்மாணம்<br>4. களஅலுவலகம் மற்றும் சேவைத் தள அலுவலக நிர்மாணம்<br>5. தாவரப் பயிரிடல் மற்றும் தாவரப் பேணுகை<br>6. நில வடிவமைப்பு அபிவிருத்தி<br><br>தாழ்நில ஈரவலய தாவரங்களின் பேணுகைக்கென ஆரம்பிக்கப்பட்ட அவிசாவளை தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்தல்.<br>1. வாகனத் தரிப்பிட நிர்மாணம்<br>2. நுழைவுச் சீட்டுக் கூடம் மற்றும் பிரதான நுழைவாயில் நிர்மணாம்<br>3. குபுக் தோட்ட வேலைகளை நிறைவு செய்தல்<br>4. உள்ளக வீதிகள் நிர்மாணம்<br>5. பூச்செடிச் செய்கை நீட்டிப்பு நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கம்<br>6. சிற்றுண்டிச்சாலை நிர்மாணம் |
| உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் | 1. தாழ் நிலத் தாவரங்கள் பற்றிய ஆய்வுகளை தொடர்ந்து முன்னெடுத்தல்<br>2. இலங்கையின் தாவரங்கள் பற்றிய மீளாய்வு<br>3. இலங்கைத் தாவரங்களுக்கான சிவப்புத் தரவுப் பட்டியல் தயாரிப்பு<br>4. இலங்கை தாவரங்களின் வெளிவாரிப் பேணுகை<br>5. கனேவத்த மூலிகைப் பூங்காவின் தாவரச் சேமிப்பை மேம்படுத்தல்.<br>6. இலங்கையின் மூலிகைத் தாவரங்கள் பற்றிய தரவுத்தளத் தயாரிப்பை ஆரம்பித்தல்<br>7. வரலாற்று மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை பாதுகாக்கும் பணியை முன்னெடுத்தல்<br>8. ஒவ்வொரு தாவரவியல் பூங்காவிலிருந்தும் குறைந்தது 10 களப் பயணங்களை மேற்கொள்ளல்.<br>9. தாவரவியல் கூட மாதிரிகளை கணணி மயப்படுத்துதல்<br>10. இலங்கையின் தாவரங்கள் குறித்த உடற்கூறியல் ஆய்வு |

| | |
|---|---|
| பூச்செடிச் செய்கை விவசாயிகள் தொழில் நுட்பம் மற்றும் ஏனைய தேர்ச்சிகள் மூலம் பலப்படுத்தப்படுவர். | 1. பூச்செடிச் செய்கை மற்றும் நில வடிவமைப்பு பூங்காவியல் தொடர்பில் விரிவுரைகள் செயலமர்வுகளை நடாத்துதல்<br>2. பூச்செடிச்செய்கை, சூழல் பாதுகாப்பு தொடர்பில் தாவரவியல் பூங்காக்களின் உள்ளேயும் வெளியேயுனம் கண்காட்சிகளை நடாத்துதல்.<br>3. பூச்செடிச் செய்கை மற்றும் நில வடிவமைப்பு பூங்காவியல் தொடர்பில் பிரசுரங்களை வெளியிடல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்<br>4. பூச்செடிச் செய்கை விவசாய சங்கங்களை அமைப்பதினூடு அத்துறைசார் விவசாயியிகளை ஒருங்கிணைத்தல்.<br>5. நாட்டின் பூச்செடிச் செய்கை தொழில் துறையை மேம்படுத்த ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.<br>6. நாளடளாவிய ரீதியில் பூ விற்பனை நிலையங்களை உருவாக்கல். |
| அலங்கார தாவரங்கள் பற்றிய நீண்ட கால மற்றும் குறுங்கால ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் | 1. பூச்செடிச் செய்கை இயலுமையுடனான உள்நாட்டு தாவரங்களை கண்டுபிடித்தல், புதிய வகைகளை உற்பத்தி செய்தல் இவற்றை சந்தைக்கு அறிமுகப் படுத்துவதற்கான ஆய்வுகளைச் செய்தல்<br>2. வெளிநாடுகளிலிருந்து தரமான பயரிடல் உபகரணங்களை இறக்குமதி செய்தல்<br>3. அறுவடைக்கு முந்திய மற்றும் பிந்திய தொழில் நுட்பங்கள் குறித்து ஆய்வு செய்தல்<br>4. திசு உருவாக்கம் மற்றும் உயிரியல் தொழில் நுட்பம் குறித்த ஆய்வுகளைச் செய்தல்.<br>5. பூச்செடிச் செய்கை தொழில் துறையில் அபிவிருத்திக்காக நீர்த்தாவரங்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் உலர்ந்த பூக்கள் குறித்த ஆய்வுகளைச் செய்தல். |
| வாழ்வாதார தேர்ச்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படும். | 1. பூச்செடிச் செய்கை மற்றும் தாவரப் பேணுகை குறித்த3 மாத, ஒரு வருட, இரு வருட கற்கை நெறிகளை நடாத்துதல்.<br>2. பூச்செடிச் செய்கை, அலங்கார தாவரவியல் மற்றும் தாவரப் பேணுகை குறித்த ஆலோசனை சேவைகளை வழங்குதல். |